# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1818/7 - 2013 ජූලි මස 09 වැනි අඟහරුවාදා - 2013.07.09

*1818/7 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.- பி. 21/78* (IX).

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்கா முதியன்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்கா ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதும்,* PV *17745 என்ற கம்பெனி இலக்கத்தைக் கொண்டுள்ளதுமான கொழும்பு சர்வதேச கப்பல்துறை மற்றும் பொறியியற் கல்லூரி (பிரைவேட்) லிமிட்டெட்* (CINEC) *தொடர்பில், அவற்றின் சுருக்கீடுகள் முறையே இதற்கான அட்டவணையின்* II *ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் தரப்பட்டுள்ளவையும், அவ் அட்டவணையின்* I *ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவையுமான பட்டங்களை அளிப்பதற்கு இட்டுச் செல்கின்ற உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காகப் பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக மேற்கூறப்பட்ட கொழும்பு சர்வதேச கப்பல்துறை மற்றும் பொறியியற் கல்லூரி (பிரைவேட்) லிமிட்டெட்டை* (CINEC) *இக்கட்டளை மூலம் ஏற்று அங்கீகரிக்கின்றேன்.*

**அட்டவணை**

| நிரல் I<br>பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடுகள் |
|---|---|
| கடலோர விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) | BSc (Hons) கடலோர விஞ்ஞானம் |
| கடல்சார் பொறியியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) | BSc (Hons) கடல்சார் பொறியியல் |
| தேவைகள் விநியோகங்கள் மற்றும் போக்குவரத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) | BSc (Hons) தேவைகள் விநியோகங்கள் மற்றும் போக்குவரத்து |

திசாநாயக்கா முதியன்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்கா,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2013, யூலை 02.*

*7 - 719*




இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.